# எழுத்தும், மொழியும் - டிஸ்லெக்சியா

**Dr. R. ப்ரீத்தி சண்முகப்பிரியா,** BOT, M.Sc. (Psychology)

**Tamil Psychiatry Journal, Vol. 1, Issue - 1, April - June 2025, Page 1 - 5**

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' எனும் ஔவையாரின் கூற்றிற்கேற்ப எழுத்தும், வாசிப்புமே நவீனகல்வி முறையின் முக்கியமான கூறுகளாக நம் மக்களிடையே இருக்கிறது. தற்போதைய சூழலில், சில குழந்தைகளால் எழுத முடியாமலும், வாசிக்க முடியாமலும் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவ்வாறு கற்றலில் ஏற்படும் சிரமங்களில் உள்ள தன்மையைத் தான் டிஸ்லெக்ஸியா என மனநல மருத்துவத் துறையில் அடையாளப்படுத்துகிறார்கள். இவ்வகையான கற்றலின் சிரமம் பற்றிய போதுமான விழிப்புணர்வு நம் சமூக மக்களிடத்தில் இல்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். அதனால் இக்குழந்தைகளுக்கான பிரத்யோகமான கல்வி கற்கும் முறைகளும், அதற்கான பள்ளிகளும், முறையான பயிற்சி வகுப்புகள் நடத்தக்கூடிய ஆசிரியர்களும் மற்றும் அக்குழந்தைகளுக்கான மருத்துவ சிகிச்சைகளும் சரிவர கிடைக்கப் பெறாமல் இருக்கிறார்கள். அதனால் தொடர்ந்து இவர்களால் கல்வி கற்க முடியாத சூழலும், அதன் தொடர்ச்சியாக மனதளவில் உண்டாகும் பிரச்சனைகளும் அதிகமாக காணப்படுகின்றது.

வளர்ந்த நாடுகளிலுள்ள டிஸ்லெக்ஸிக் மாணவர்களைப் பார்க்கும் போது, இந்தியாவிலுள்ள டிஸ்லெக்ஸிக் மாணவர்கள் கூடுதல் சவால்களை எதிர்கொள்கிறார்கள். அவற்றுள் மிக முக்கியமான மூன்று பற்றாக்குறைகள் நம் நாட்டில் மிகப்பெரிய சவால்களாக இருக்கின்றன.

**முதலாவதாக விழிப்புணர்வு இல்லாமை:**

இந்தியாவில் பலருக்கும் டிஸ்லெக்ஸியா பற்றிய தெளிவான புரிதலும், மருத்துவ ரீதியான விழிப்புணர்வும் இல்லாமல் இருப்பதால், பாதிக்கப்பட்ட குழந்தைகள் தவறான நோயறிதலுக்கும், ஆதரவின்மைக்கும் ஆளாகிறார்கள்.

**இரண்டாவதாக வளப்பற்றாக்குறை:**

சிறப்புக் கல்விக்கான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவி தொழில்நுட்ப சேவைகள் உட்பட இந்தியாவில் டிஸ்லெக்ஸிக் மாணவர்களுக்கு கல்வி கற்றலுக்கான வளப்பற்றாக்குறை அளவில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றோம்.

**மூன்றாவதாக களங்கம் (Stigma):**

இந்தியாவில் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்ட நபர்கள் மீது ஒருவித களங்கத்தை சமூகம் மூடநம்பிக்கைகளாலும், வாய்வழிச் செய்திகளாலும் மக்களிடையே தொடர்ந்து பரப்பப்பட்டும், நம்பப்பட்டும் வருகிறது. இதனால் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நம் சமூக மக்களால் தொடர்ந்து கேலிக் கிண்டலுக்கு ஆளாவதும் அல்லது அவர்களிடம் பாகுபாடு காட்டி பழகுவதற்கும் வழிவகுத்துக் கொடுக்கிறார்கள்.

**டிஸ்லெக்ஸியா என்றால் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம்:**

- ❖ "டிஸ்லெக்ஸியா என்பது நரம்பியல் சார்ந்த ஒரு கோளாறாகும்." இம்மாதிரியான நரம்பு சார்ந்த பிரச்சனையால் இயல்பாக ஒரு குழந்தை செய்யும் செயல்பாடான வாசிப்பது, எழுதுவது மற்றும் வார்த்தைகளை உச்சரிப்பது போன்ற செயல்பாடுகள் குழந்தைப் பருவத்திலேயே பாதிக்கப்பட்டிருக்கும்.
- ❖ டிஸ்லெக்ஸியா என்றாலே குறிப்பிட்ட விதமான கற்றலின் சிரமம் பற்றியே தொடர்ந்து நம் மக்களால் வரையறுக்கப்படுகிறது. உண்மையில் டிஸ்லெக்ஸியா என்பது மனித மூளை செல்களில் ஏற்படும் செயல்திறனில் உள்ள குறைபாடாகும்.
- ❖ டிஸ்லெக்ஸியாவில் பொதுவாகக் கேட்பது,

சிந்திப்பது, பேசுவது, படிப்பது, எழுதுவது அல்லது எழுத்துப்பிழை செய்வது அல்லது கணிதம் செய்யும் திறனில் ஏற்படும் தடங்கல்கள் தான், தொடர் பிரச்சனையாக குழந்தைகளுக்கு வெளிப்படுகிறது.

❖ டிஸ்லெக்ஸியா என்பது அறிவுத்திறன் மதிப்பீட்டின் குறிகாட்டியாக மட்டும் எடுத்துக் கொள்வதில்லை. டிஸ்லெக்ஸியா உள்ள பல குழந்தைகள் சராசரிக்கு மேல் புத்திசாலித் தன்மையோடு இருக்கின்றனர்" என்று டிஸ்லெக்ஸியா அசோசியேஷன் ஆஃப் இந்தியாவில் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**டிஸ்லெக்ஸியா பாதிப்பின் நரம்பியல் தாக்கத்தினை அடிப்படையளவில் நாம் புரிந்து கொள்வோம்:**

❖ குழந்தைகள் கண்களால் காணும் எழுத்துகளையும் அல்லது காதால் கேட்கும் சொற்களையும் / செய்திகளையும் மூளைக்கு அனுப்புவதிலும், மூளை அவற்றைப் பெறுவதிலும், புரிந்துகொள்வதிலும் நரம்பியல் ரீதியாகச் சிரமங்கள் ஏற்படும் போது இந்த பாதிப்பு ஏற்படுகிறது.

❖ பிறக்கும் போதே சில குழந்தைகளுக்கு எப்படி பார்வைக் குறைபாடு அல்லது கேட்கும் திறன் குறைபாடு ஏற்படுகிறதோ, அதேபோல் தான் மனித மூளையில் நியூரான்களின் செயல்திறன் குறைவதினால் இப்பாதிப்பு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. குழந்தைகள் இயல்பாக தங்களின் கண்களால் காணும் ஒரு மொழியின் எழுத்துகளையும், அவர்களின் மூளை நரம்புகள் வழியாக உள்வாங்கி அதற்கேற்ப எழுத்து மாற்றம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யப்படாமல் போகையில், குழந்தைகளுக்கு ஒரு எழுத்துக்கும் மற்றொரு எழுத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் போகும்.

❖ உதாரணமாக ஆங்கில எழுத்துகளான ‘b’ மற்றும் ‘d’ ஒரே மாதிரி இருப்பதால், குறைபாடுள்ள குழந்தைகள் ‘bag’ என்று எழுதுவதற்குப் பதிலாக ‘dag’ என்று எழுதுவர். இதனால் அவர்களின் அடிப்படைக் கல்வி பாதிக்கப்படுகிறது.

குழந்தைகளின் மூளையின் செயல்திறனைப் பொறுத்து நோயின் தீவிரத்தன்மை மாறுபடும்.

டிஸ்லெக்ஸியா எதனால் ஏற்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

இந்தியாவில் 100 குழந்தைகளில் 12 குழந்தைகள் டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக, ஆண் குழந்தைகளுக்குத்தான் பாதிப்பு அதிகமாக இருக்கின்றது. இது பெரும்பாலும் பரம்பரைத் தன்மையால் ஏற்படுகிறது என்று மருத்துவத் துறையில் கூறுகின்றனர். கற்கும் ஆற்றலுக்கு உதவும் மூளை மரபணுக்களில் ஏற்படும் பிழைதான் இதற்கு அடிப்படைக் காரணம். மேலும், குறைபிரசவக் குழந்தைகளும், எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளும் இந்தப் பிரச்சினைக்கு உள்ளாகிறார்கள். தாயானவர் கர்ப்ப காலத்தில் சாப்பிட்ட சில மருந்துகளின் பக்கவிளைவு, மது அருந்துதல், புகைப்பிடித்தல், பிரசவத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் போன்ற காரணங்களால் கருவில் வளரும் சிசுவைப் பாதிக்கும் போது, குழந்தைக்குக் கற்றலில் குறைபாடு ஏற்படலாம்.

இன்றைய தினம் பல பெற்றோர்களும், ஆசிரியர்களும் ‘கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளை’ ஆரம்பக்கட்டத்திலேயே அடையாளம் காணத் தவறி, பிரச்சினை முற்றிய பிறகு மருத்துவ ஆலோசனைக்கு அழைத்து வருவது அதிகரித்து வருகிறது.

டிஸ்லெக்ஸியாவின் அறிகுறிகள் பற்றி தெரிந்து கொள்வோம்:

❖ முன் / பின் மற்றும் வலது / இடது போன்றவைகளைப் பற்றிய குழப்பம்.

❖ வார்த்தைகளை நினைவுகூர்தல் மற்றும் பொருட்களை அடையாளம் காண்பதில் உள்ள சிரமங்கள்.

❖ Auditory Awareness – கேள்வியொலி விழிப்புணர்வு: ஒலி இயைபுடைய சொற்களை

அடையாளங்காண்பது, அமைப்பது மற்றும் வார்த்தைகளின் அசைகளை எண்ணுவது போன்றவைகளில் உள்ள சிரமங்கள்.

- Phonetic Awareness– ஒலியலகு விழிப்புணர்வு: வார்த்தைகளின் பல்வேறு ஒலியலகுகளைக் கேட்பதிலும், பகுப்பதிலும் உள்ள சிரமங்கள்.
- Auditory Discrimination – கேள்வி புலப் பாகுபாடு : வார்த்தைகளின் பல்வேறு ஒலி பேதங்களை அடையாளங்காண்பதில் உள்ள சிரமங்கள்.
- Alphabet Sounds – எழுத்துகளின் ஒலிகளைக் கற்பதிலுள்ள சிரமங்கள்.
- சொற்களை அவற்றின் சரியான அர்த்தத்தோடு இணைத்துப் பார்ப்பதில் உள்ள சிரமங்கள்.
- நேரத்தைக் கடைபிடிப்பதிலும், காலம் எனும் நியதியோடு இயைவதிலும் ஏற்படும் சிரமங்கள்.
- சொற்களைத் தொகுப்பதிலுள்ள குழப்பம்.
- பேச்சு சரிவர அமையாமல் போய்விடுமோ என்ற பயத்தில் சில குழந்தைகள் உள் வாங்குபவர்களாகவும், வெட்கப்படுபவர்களாகவும், தங்களைச் சுற்றியுள்ள சமுதாயக் கூறுகளை உணர்ந்து கொள்ள முடியாத காரணத்தால் மற்றவர்களைச் சண்டை இழுப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.
- நடைமுறை ஒழுங்குக் குறைபாடுகள்.

**கல்வி சார்ந்த சவால்கள் :**

டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி சார்ந்த சவால்களை விரிவாகப் புரிந்துகொள்வோம்.

**1. வாசிப்பதில் சிரமம்:**

டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான குழந்தைகளுக்கு வாசிப்பதில் சிரமமுள்ளது. மொழி, எழுத்துக்கள் மற்றும் சொற்களைப் புரிந்துகொள்வது அவர்களுக்கு கடினமாக இருக்கும்.

வாசிப்பதில் அவர்களின் வயதிற்கு ஏற்ற வேகமில்லாமல் வாசிப்பது, கேட்கும் வார்த்தைகள் புரியாமல் இருப்பது, வாக்கியங்களை கட்டமைக்கச் சரியான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது, வார்த்தைகளுக்கு இடையே வித்தியாசம் காணமுடியாமல் தவிப்பது, எழுத்துக்கூட்டி படிப்பதில் சிரமம், படிப்பது தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருப்பது போன்றவற்றிலுள்ள சிரமங்கள் தான், குழந்தைகளுக்கு டிஸ்லெக்ஸியா இருப்பதற்கான அறிகுறிகளாகும்.

**2. எண்களில் சிரமம்:**

டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகள் கணிதத்தைச் சவாலாகக் கருதுகிறார்கள். கூட்டல், கழித்தல் மற்றும் பிற பெரிய கணக்கீடுகளைச் செய்வது அனைத்துமே அவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். நாட்கள், வண்ணங்கள் மற்றும் மாதங்களை நினைவில் கொள்வதும் அவர்களுக்கு கடினமாக இருக்கும்.

**3. மோசமான கையெழுத்து:**

டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகள் பெரும்பாலும் தாங்கள் எழுதும் எழுத்து நடையில் சிரமப்படுகிறார்கள். பேனா அல்லது பென்சிலைக் கொண்டு பேப்பரில் எழுத அவர்களுக்குச் சிரமமாக இருக்கும். இலக்கணம் மற்றும் நிறுத்தற்குறிகளைப் புரிந்துகொள்வது கூட அவர்களுக்கு கடினமாக இருக்கும்.

**4. பணிகளைப் பின்பற்ற முடியாமை:**

இந்தக் குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் பல விதமான பணிகள் அல்லது தொடர் வழி முறைகளைப் பின்பற்றுவதில் சிரமம் ஏற்படும். ஏனென்றால், அவர்களின் புரிந்துகொள்ளும் திறன் மெதுவாக இருப்பதால், வழிமுறைகளைப் புரிந்துகொண்டு செயல்படுத்த அவர்களுக்கு காலதாமதம் எடுக்கும். அவர்கள் சொற்களின் / எழுத்துக்களின் வடிவத்தினாலும் குழப்பமடைவார்கள்.

தாங்கள் கற்கும் கல்வியில் பின்னடைவு ஏற்படுவதன் உண்மையான காரணம் தெரியாமல் எழுதுவதிலோ, வாசிப்பதிலோ ஆர்வமற்று இருக்கும் இக்குழந்தைகளை கண்டறிந்து

இவர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் மூலம் இக்குழந்தைகளின் கல்வி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இயலும். கூடவே தனித் திறன்களையும் கண்டறிந்து மேம்படுத்தினால் டிஸ்லெக்ஸியா குறைபாட்டினைத் தாண்டியும் சாதிக்க முடியும்.

**செயல்முறை சிகிச்சை:**

இக்குழந்தைகளுக்கு கல்விரீதியான சிரமத்தினால், அவர்களின் வாழ்வில் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஏற்படும் நடைமுறைச் சிக்கலை மனவலிமையோடு எதிர்கொள்ளவும், சூழலிற்கேற்ப தங்களுடைய தனித்திறனை மேம்படுத்தி ஆக்கபூர்வமாக செயலாற்றவும் செயல் முறை சிகிச்சை பெரிதும் உதவுகிறது. அவர்களின் பள்ளிக் கல்வியிலும், வாழ்க்கையிலும் வெற்றிபெறத் தேவையான திறன்களை மேம்படுத்துவதற்கு OT (Occupational Therapy) வல்லுநர்கள் உதவுகிறார்கள்.

இச்சிகிச்சையானது வாசிப்பு மற்றும் எழுத்தினை வாழ்வின் தினசரி செயல்பாட்டுக்கு தேவையானத் திறனாக கருதுகிறது. எனவே OT வல்லுநர்கள் டிஸ்லெக்ஸியாவை நிர்வகிப்பதற்கும் திறமையான வாசிப்பு மற்றும் எழுதும் திறன்களை வளர்ப்பதற்கும் பலவிதமான உத்திகளை செயல் வழி சிகிச்சை வாயிலாக பயிற்றுவிப்பார்கள். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகளுக்கான செயல்முறை சிகிச்சையின் சில நன்மைகளைப் பார்ப்போம்:

**1. மேம்படுத்தப்பட்ட கையெழுத்து மற்றும் உடலியக்கத் திறன்கள்:**

டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகள் எழுதுதல் மற்றும் பிற உடலியக்கம் சார்ந்த பணிகளில் சிரமப்படலாம். செயல்முறை சிகிச்சையானது அவர்களின் கை–கண் ஒருங்கிணைப்பு, விரல்களின் பிடியின் வலிமை மற்றும் எழுதுவதற்குத் தேவையான பிற திறன்களை மேம்படுத்த உதவுகிறது. இவற்றுடன் உணர்ச்சி ஒருங்கிணைப்பு சிகிச்சை, கைகளை வலுப்படுத்தும் பயிற்சிகள் மற்றும் காட்சிப் புலனுணர்வு பயிற்சி போன்றவற்றையும் மேம்படுத்துகிறது.

**2. மேம்படுத்தப்பட்ட உணர்வு செயலாக்கம்:**

டிஸ்லெக்ஸியா ஒரு குழந்தையின் உணர்ச்சித் தகவலைச் செயலாக்கும் திறனைப் பாதிக்கலாம். இது கற்றல் மற்றும் சமூகநடத்தைச் சிரமங்களுக்கு வழிவகுக்கும். செயல்முறை சிகிச்சையானது டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகளுக்கு, அவர்களின் ஒட்டுமொத்த செயல்பாடு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில், உணர்ச்சித் தகவலை எவ்வாறு செயலாக்குவது என்பதை அறிய உதவுகிறது.

**3. மேம்படுத்தப்பட்ட சமூகத் திறன்கள்:**

டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகளுக்கு சமூகத் திறனும் பாதிக்கப்படலாம். டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகளுக்கு இந்தத் திறன்களைக் கற்றுக் கொள்ளவும், பயிற்சி செய்யவும் உதவுவதற்கு செயல்முறை சிகிச்சையாளர்கள் சமூகத் திறன்கள் சார்ந்த பயிற்சி மற்றும் பிற நுட்பங்களைப் பயன்படுத்துவார்கள்.

இந்தக் குழந்தைகளைப் பெற்றோரும், ஆசிரியர்களும் எவ்வாறு கையாள வேண்டும்?

முதலில் இந்தக் குழந்தைகளை மிகுந்த பொறுமையுடன் கையாள வேண்டும். அவர்கள் மீதுள்ள கோபத்தைத் தள்ளிப்போட வேண்டும். அவர்களை அதட்டுவதும், அடிப்பதும் கூடாது. அவர்களுக்கு தண்டனைத் தரக்கூடாது. ஒரு முறை சொன்னது அவர்களுக்குப் புரியவில்லை என்றால், மறுமுறை சொல்லத் தயங்கக்கூடாது. சொன்னதைச் சரியாகச் செய்தால், மற்றவர்கள் மத்தியில் அவர்களைப் பாராட்டி, கைதட்டி உற்சாகப்படுத்தினால், அவர்கள் மனதிலுள்ள தாழ்வு மனப்பான்மை நீங்கி, இயல்பாக மற்றவரிடம் பழகத் தொடங்குவார்கள். இவர்களை மற்ற மாணவர்களுடன் கண்டிப்பாக ஒப்பிடக் கூடாது. முடிந்தவரை இவர்கள் தனியாக அமர்ந்திருப்பதையும், உலாவுவதையும் அனுமதிக்க வேண்டாம். மற்றவர்களுடன் இயல்பாகப் பழகுவதை ஊக்கப்படுத்துவதும் மிக முக்கியம்.

இந்தப் பிரச்சினை ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறு மாதிரி இருக்கும். எனவே, ஒவ்வொரு குழந்தையிடமும் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் தனித்திறமைகளை வெளியில் கொண்டுவர ஊக்கப்படுத்துவது நல்ல பலனளிக்கும். அந்த திறமைகளை அவர்கள் எளிதில் வளர்த்துக்கொண்டு முன்வரிசைக்கு வருவார்கள். எந்த வகையிலும், அவர்கள் மற்ற குழந்தைகளைக் காட்டிலும் அறிவிலும், ஆற்றலிலும் குறைந்தவர்கள் அல்ல என்பதை அடிக்கடி வலியுறுத்த வேண்டும். தேர்வு, மதிப்பெண், ரேங்க் இவையெல்லாம் தாண்டி, உன்னத உலகமும் பெருவாழ்வும் காத்திருப்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

ஹ்ரிதிக் ரோஷன், அபிஷேக் பச்சன், ஓவியர் லியனார்டோ டாவின்சி, அலெக்சாண்டர் கிரகாம்பெல், ஐன்ஸ்டைன், தாமஸ் ஆல்வா எடிசன், குத்துச் சண்டை வீரர் முகமது அலி, எழுத்தாளர் அகதா கிறிஸ்டி போன்றோருக்குக் குழந்தைப் பருவத்தில் ‘கற்றல் குறைபாடு’ இருந்தது என்பது உலகறிந்த விஷயமாகும். ஆனாலும், அவர்களும் சாதனையாளர்களே!

## REFERENCES


Sara Woodward, Yvonne Swinth; Multisensory Approach to Handwriting Remediation: Perceptions of School-Based Occupational Therapists. Am J Occup Ther May/June 2002, Vol. 56(3), 305–312. doi: https://doi.org/ 10.5014/ajot.56.3.305

Udita Khurana, Neelima Chopra. (2020). Occupational Therapy And Special Education As Remedial Intervention To Enhance Cognitive Processes Of Children With Specific Learning Disability. PalArch’s Journal of Archaeology of Egypt / Egyptology, 17(7), 14031-14046. Retrieved from https://archives.palarch.nl /index.php/jae/article/view/5354

Tanner, Kathleen. “The Lived Experience of Adults with Dyslexia: An Exploration of the Perceptions of Their Educational Experiences.” Murdoch University, 2010. Web.